**செய்தி வெளியீடு எண்: 597** **நாள்: 30.03.2024**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு கேரள மாநில எல்லை அருகே குன்னூரில் உள்ள சோதனைச் சாவடியில், தி.மு.க வேட்பாளர் திரு.ஆ.ராஜாவின் பிரச்சார ஊர்தியை சோதனை செய்வதில் மெத்தனம் இருப்பதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் மாவட்ட தேர்தல் அதிகாரி, நீலகிரி மற்றும் செலவினப் பார்வையார்களால் சோதனைப் பணிகளில் குளறுபடிகள் கண்டறியப்பட்டதால், பறக்கும் படைக்குழு தலைவி கீதா, பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், பறக்கும் படைக்குழுவின் அனைத்து பணியாளர்களும் மாற்றப்பட்டுள்ளனர். இது குறித்து செலவினப் பார்வையாளர் சம்பவ இடத்திற்கு சென்று முழுவிசாரணை நடத்தி புகைப்படக் கண்காணிப்பு குழுக்கள் பதிவு செய்த இரண்டு காணொளி காட்சிகளை பார்வையிட்டார். பத்திரிக்கை தரப்பு காணொளி மற்றும் புகைப்பட குழு காணொளி இரண்டும் சாதாரண மற்றும் மேலோட்டமான சோதனையைக் காட்டுகின்றன. பிரச்சார ஊர்வலத்தில் இருந்த மற்ற வாகனங்கள் சோதனை செய்யப்படவில்லை. ஒரு முக்கிய வேட்பாளரிடம் காட்டப்பட்ட மென்மையான அணுகுமுறையை தேர்தல் ஆணையம் கவனத்தில் கொண்டுள்ளது. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்யும் பொருட்டு, இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய தேர்தல் நடத்தை விதிமுறைகளை அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மீறுவது கண்டறிப்பட்டால் அவர்கள் மீது உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தலைமை தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in